# உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## SC No : 200/2020

| | | |
|---|---|---|
| பெயர் | .. | முருகேஸ்வரி (அசா.3) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் முன்பு சென்னை அம்பத்தூரில் வசித்து வந்தேன். தற்பொழுது கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி என் உடன் பிறந்த சகோதரர் ஆவார். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதியதால் அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

போலீஸ் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் எனது பெற்றோர்கள் கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருவதாகவும் உடன் பிறந்த மற்றொரு தம்பி அழகர் சாமி என்பவர் சென்னையில் சுவிட் கடை தொழில் செய்து வருவதாகவும் எனது மூன்றாவது தம்பி கண்ணன் கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருவதாகவும் அவனுக்கு எதிராக பல்வேறு காவல் நிலையத்தில் கொலை மற்றும் கொள்ளை வழக்குகள் இருந்து வருவதாகவும், எனது தம்பி அழகர்சாமியை மகனுக்கு மொட்டை போடுவதற்காக அவன் குடும்பத்துடனும் நானும் எனது குடும்பத்துடனும் கெச்சிலாபுரம்

வந்ததாகவும் எதிரி கண்ணன் கடந்த 15.02.2019 ம் தேதியன்று ஜாமினில் வெளியே வந்து பெற்றோர் வீட்டிற்கு வந்து சொத்தை பிரித்து கொடுக்கும்படி கேட்டு தகறாறு செய்ததாகவும், 19.02.2019 ம் தேதியன்று காலை 08.00 மணிக்கு எதிரி கண்ணன் கையில் அரிவாளுடன் வந்து எனது அப்பாவை பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டி சொத்து தரமாட்டியா என கூறி அவர் நீ உயிரோடு இருந்தால் தானே சொத்து தரமாட்ட என கூறி அவர் கையில் வைத்திருந்த அரிவாளை வைத்து என் அப்பாவின் கழுத்தை பார்த்து ஓங்கி வெட்டியதாகவும் அது சமயம் அவர் குனிந்து கொண்டதால் அவர் தப்பித்தார் எனவும், அது சமயம் நானும் எனது அம்மா என் கணவர் மற்றும் மற்றொரு சகோதரர் அழகர் சாமி ஆகியோர் சத்தம் போடவும் எதிரி கண்ணன் என் அப்பாவை பார்த்து இன்று தப்பித்து விட்டாய் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொன்று சொத்தை எடுக்காமல் விடமாட்டேன் என மிரட்டி விட்டு போய் விட்டதாகவும், எனது அப்பா உயிருக்கு பயந்து காவல் நிலையத்தில் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்ததாகவும் கூறிவிட்டு தற்பொழுது எதிரி உடன் பிறந்த சகோதரர் காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :** – இல்லை

## உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## SC No : 200/2020

| | |
|---|---|
| பெயர் | .. அழகர்சாமி (அசா.4) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2026 ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

**எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் முன்பு சென்னையில் வசித்து வந்தேன். தற்பொழுது கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி என் உடன் பிறந்த சகோதரர் ஆவார். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீஸார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதியதால் அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

போலீஸ் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் எனது பெற்றோர்கள் கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருவதாகவும் உடன் பிறந்த மற்றொரு சகோதரி முருகேஸ்வரி சென்னையில் குடியிருந்து வந்ததாகவும், நான் சென்னையில் சுவிட் கடை தொழில் செய்து வருவதாகவும் எனது மூன்றாவது தம்பி கண்ணன் கெச்சிலாபுரத்தில் குடியிருந்து வருவதாகவும் அவனுக்கு எதிராக பல்வேறு காவல் நிலையத்தில் கொலை மற்றும் கொள்ளை வழக்குகள் இருந்து வருவதாகவும், எனது மகனுக்கு மொட்டை போடுவதற்காக நான் குடும்பத்துடனும் எனது சகோதரி

குடும்பத்துடனும் கெச்சிலாபுரம் வந்ததாகவும் எதிரி கண்ணன் கடந்த 15.02.2019 ம் தேதியன்று ஜாமினில் வெளியே வந்து பெற்றோர் வீட்டிற்கு வந்து சொத்தை பிரித்து கொடுக்கும்படி கேட்டு தகறாறு செய்ததாகவும், 19.02.2019 ம் தேதியன்று காலை 08.00 மணிக்கு எதிரி கண்ணன் கையில் அரிவாளுடன் வந்து எனது அப்பாவை பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டி சொத்து தரமாட்டியா என கூறி அவர் நீ உயிரோடு இருந்தால் தானே சொத்து தரமாட்ட என கூறி அவர் கையில் வைத்திருந்த அரிவாளை வைத்து என் அப்பாவின் கழுத்தை பார்த்து ஓங்கி வெட்டியதாகவும் அது சமயம் அவர் குனிந்து கொண்டதால் அவர் தப்பித்தார் எனவும், அது சமயம் நானும் எனது அம்மா, எனது சகோதரி மற்றும் அவரது கணவர் ஆகியோர் சத்தம் போடவும் எதிரி கண்ணன் என் அப்பாவை பார்த்து இன்று தப்பித்து விட்டாய் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொன்று சொத்தை எடுக்காமல் விடமாட்டேன் என மிரட்டி விட்டு போய் விட்டதாகவும், எனது அப்பா உயிருக்கு பயந்து காவல் நிலையத்தில் எதிரிக்கு எதிராக புகார் கொடுத்ததாகவும் கூறிவிட்டு தற்பொழுது எதிரி உடன் பிறந்த சகோதரர் என்ற காரணத்தினால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : –** இல்லை